கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்

வழக்கு எண் MCOP No.196/2023

நாள் 06.02.2025

**<u>மனுதாரர் தரப்பில் மசாஆ 2 ஆஜராகி 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

(ம.சா. 2 – கணேசன் முன்னிலையானார்.

**<u>2ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் இறந்துபோன கார்த்திக் எனது ஊரான மேல்மங்கலத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். கார்த்திக் எனது நண்பராகும். நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வரவில்லை. இறந்த கார்த்திக் ஓட்டுநர் ஆக பணியாற்றி வந்தார். அவர் வேறு ஏதேனும் பணி செய்து வந்தாரா என்றால் ஓட்டுநராக பணியாற்றி வந்தார். அவர் மாதம் எத்தனை ரூபாய் வருமானம் ஈட்டி வந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் ரூ.30 ஆயிரம் சம்பாதித்து வந்தார். ரூ.30 ஆயிரம் சம்பாதித்து வந்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் விபத்து நடந்தபோது TN–60–AF–2106 சரக்கு வாகனத்தில் எதற்காக கார்த்திக் உடன் சென்றேன் என்றால் அவர் துணைக்கு அழைத்தார், நான் சென்றேன். என்னுடன் வேறு யாரும் செல்லவில்லை. நான் மேல்மங்கலத்திலிருந்தே கார்த்திக் உடன் சென்றேன். வாகனத்தில் நெல் ஏற்றப்பட்டிருந்தது. மேற்படி நெல் யாரிடமிருந்து யாருக்கு கொண்டு செல்லப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. நெல் ஏற்றப்பட்டதற்கான ஆவணம் எதுவும் பற்றி தெரியாது. கிளீனர் யாரும் கூட இல்லை. TN–60–AF–2106 வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தெரியாது. கார்த்திக் ஓட்டுநராகத்தான் அந்த வாகனத்தை ஓட்டினார். விபத்து மே மாதம் 10 தேதி நடந்தது, வருடம் சரியாக ஞாபகமில்லை, சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நடந்தது. விபத்து சமயத்தில் மேற்படி வாகனம் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி சென்றது என்று எனக்கு தெரியாது. எந்த ஊருக்கு சரக்கு கொண்டு செல்லப்பட்டது என்றால் மேல்மங்கலத்திலிருந்து திருநெல்வேலி கொண்டு செல்லப்பட்டது. நான் வாகனத்தில் செல்லும்போது விழிப்புடன்தான் சென்றேன். கார்த்திக் மெதுவாகத்தான் வாகனத்தை

ஓட்டினார். எங்கள் முன்பாக சென்ற வாகனத்தின் எண் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் முன்னால் சென்ற வாகனத்தின் 10 அடி பின்னால் நாங்கள் சென்று கொண்டிருந்தோம். எங்கள் முன்னால் சென்ற வாகனம் திடீரென்று அட்ரஸ் கேட்பதற்காக நிறுத்தியபோது நாங்கள் சென்ற வாகனம் எங்கள் முன்னால் சென்ற வாகனத்தின் பின்னால் இடித்தது. நாங்கள் வாகனத்தில் டயர் மற்றும் பிரேக் கண்டிசனாக இருந்ததா என்றால் இருந்தது. TN–90–D–5134 வாகனம் மண் ரோட்டில் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தது என்றாலும், நாங்கள் சென்ற வாகனத்தை ஓட்டிய கார்த்திக் தறிகெட்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி பின்னால் இடித்தது என்றாலும், விபத்திற்கு கார்த்திக்கின் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் காரணம் என்று சொன்னாலும் சரியல்ல. கார்த்திக் ஓட்டிய வாகனம் TN–90–D–5134 வாகனத்தின் பின்னால் இடித்து தலைகீழாக குப்புற கவிழ்ந்தது என்றால் சரிதான். காலை 5 மணிக்கு வண்டியின் முகப்பு விளக்கு எரியப்பட்டு நல்ல வெளிச்சமாக இருந்தது என்றால் சரிதான். எனக்கு விபத்தில் தலையில் காயம் ஏற்பட்டது. கார்த்திக் 25 நாட்கள் கழித்துதான் இறந்தார். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். நானும் 10 நாட்கள் அங்கு சிகிச்சையில் இருந்தேன். அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் கார்த்திக் உடன் வாகனத்தில் இருந்தால் சிகிச்சைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் என்னிடம் விபத்து சம்பந்தமாக விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்தது பற்றி எனக்கு தெரியாது. TN–90–D–5134 வாகனத்தின் ஓட்டுநர்தான் கார்த்திக் மீது புகார் கொடுத்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. கார்த்திக் விபத்தில் இறந்து விட்டதால் அவர் மீது பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அற்று போய் விட்டது என்று சொன்னால் அதுபற்றி தெரியாது. நான் நேரடியாக விபத்தை பார்த்த சாட்சியம் அல்லாததால் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் ஒரு பயணியாகவும், கார்த்திக் ஓட்டுநராகவும் சரக்கு

வாகனமான TN-60-AF-2106 வாகனத்தில் பயணம் செய்யும்போதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். செந்தில்குமார் திடீரென்று அவரது வாகனத்தை பிரேக் போட்டு நிறுத்தியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து கார்த்திக்கின் கவனக்குறைவால் நடைபெறவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் கார்த்திக் தன்னுடைய வாகனத்தை மெதுவாகவும், கவனமாகவும்தான் ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். செந்தில்குமார் திடீரென்று தனது வாகனத்தை நிறுத்துவார் என்பதை கார்த்திக் எதிர்பார்க்காததால்தான் இந்த விபத்து நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். அதனால்தான் முன்னால் சென்ற லாரியின்மீது மோதி இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். முன்னால் சென்ற லாரியின் ஓட்டுநர் கவனமில்லாமலும், எந்த வித சைகையும் செய்யாமல், அஜாக்கிதையாகவும் ஓட்டி சென்றார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் கார்த்திக் ஓட்டி சென்ற வாகனத்தில் நெல் மூட்டைகள் இருந்தது. கார்த்திக் தான் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளரிடம் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான்.

<u>**மறு விசாரணை**</u> – இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
06.02.2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.